குடியரசுத் தலைவரின் பொறுப்பு: நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கூட்டுவது மற்றும் கூட்டத்தொடரை முடிவுக்கு கொண்டுவருவது குடியரசுத் தலைவரின் பொறுப்பு. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எந்தவொரு மசோதாவும் இவர் ஒப்புதலைப் பெற்ற பின்னரே சட்டமாக மாறும்.

4

இந்து தமிழ் திசை

உள்வலம்

புதன், ஜூன் 10, 2026 www.hindutamil.in

தேசிய அவசர நிலை: போர், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதக் கிளர்ச்சி போன்ற காலங்களில் நாட்டில் தேசிய அவசர நிலையை குடியரசுத் தலைவர் அறிவிக்கலாம். மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலையும் போது, அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 356-ன் கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த முடியும்.

பூவாணம் பகுதியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்த எம்எல்ஏ நா.அசோக்குமார்.

பீனிக்ஸ் பறவைபோல திமுக மீண்டும் உயிர்த்தெழும்

பேராவூரணி எம்எல்ஏ நம்பிக்கை

தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தொகுதியில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்ற நா.அசோக்குமார், சேதுபாவாசத்திரம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அப்போது, அவர் பேசியது:

இன்று தமிழக மக்கள் அனுபவித்து வரும் பல்வேறு நலத் திட்டங்களும் முந்தைய திமுக ஆட்சியில் முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலினால் கொண்டு வரப்பட்டவை என்பதை மறந்து விடக் கூடாது. ஆட்சி மாற்றம் என்று தமிழக மக்கள் தங்களையே ஏமாற்றிக் கொண்டுள்ளனர்.

தற்போதைய ஆட்சி எவ்வளவு காலம் நீடிக்கும் என தெரியாது. ஆனால், திமுக எப்போதும் சோதனைகளைக் கடந்து சாதனை படைக்கும் இயக்கம். பீனிக்ஸ் பறவைபோல திமுக மீண்டும் உயிர்த்தெழும். தமிழகத்தில் நடைபெற உள்ள உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் திமுக பிரம்மாண்ட வெற்றி பெறும் என்றார்.

திமுக ஒன்றியச் செயலாளர்கள் செ.ஞானபிரகாசம், மு.கி.முத்துமாணிக்கம், குழ.செ.அருள்நம்பி உட்பட பலர் பங்கேற்றனர்.

புறவழிச் சாலைக்கு நிலம் கையகப்படுத்தியதில்

விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக் கோரி போராட்டம்

மயிலாடுதுறை

மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் புறவழிச் சாலைத் திட்டத்துக்காக கையகப்படுத்தப்பட்ட கோயில் மற்றும் ஆதீன நிலங்களில் சாகுபடி செய்த குத்தகை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக் கோரி விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலாடுதுறையில் மல்லியம் ஆணைமேலகரம் முதல் திருவிழந்தூர், பல்லவராயன் பேட்டை, கழுக்காணிமுட்டம், உளுத்துக்குப்பை, மணக்குடி, தருமபுரம், மன்னம்பந்தல் வழியாக அகரகீரங்குடி வரை புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்துக்காக நிலம் கையகப்படுத்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ள நிலையில், அறநிலையத் துறைக்கு சொந்தமான கோயில் நிலங்கள் மற்றும் ஆதீன நிலங்களில் குத்தகை அடிப்படையில் சாகுபடி செய்து வந்த விவசாயிகள், ஆதீன இடங்களில் வசித்து வந்தவர்களுக்கு இழப்பீடு வழங்காததை கண்டித்தும், மத்திய அரசின் 2013-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்படி குத்தகை விவசாயிகள் மற்றும் அனுபவதாரர்களுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும், புறவழிச் சாலை அமைக்கும் பணியில் பாசன மற்றும் வடிகால் வசதிகள் பாதிக்கப்படாத வகையில் பாலங்கள் அமைக்க வேண்டும் என வலியுறுத்தியும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் தமிழ்நாடு அடிமனை பயனாளிகள், குத்தகை விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

குத்தகை விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்டத் தலைவர் பக்கிரிசாமி தலைமையில், மாவட்டச் செயலாளர் விஜய், சிறப்புத் தலைவர் ராயர், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் துரைராஜ், டெல்டா பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் அன்பழகன் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். பின்னர், கோட்டாட்சியர் விஷ்ணுபிரியா போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, இதுகுறித்து உயரதிகாரிகளுடன் ஆலோசித்து ஓரிரு நாட்களில் உரிய தகவல் தெரிவிக்கப்படும் என உறுதியளித்தார்.

இதையடுத்து, அறிவிக்கப்பட்டிருந்த காத்திருப்பு போராட்டத்தை விவசாயிகள் தற்காலிகமாக தள்ளிவைத்தனர். இருப்பினும், ஜூன் 12-ம் தேதிக்குள் இழப்பீடு தொடர்பாக அறிவிப்பு வெளியாகாவிட்டால், மீண்டும் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

வாகனப் பதிவு, ஓட்டுநர் உரிமம் விவரங்களில்

செல்போன் எண்ணை புதுப்பிக்க அறிவுறுத்தல்

காரைக்கால்

காரைக்கால் வட்டார போக்குவரத்து அதிகாரி எம்.தட்சிணாமூர்த்தி நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பொதுமக்களின் நலன் கருதியும், மக்களுடன் நேரடி தொடர்பை மேம்படுத்தவும், போக்குவரத்து சேவைகளை எளிதாகவும், விரைவாகவும் வழங்கும் நோக்கத்துடனும், அனைத்து வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்போர் தங்களது ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள செல்போன் எண்ணை வாகனப் பதிவு மற்றும் ஓட்டுநர் உரிமம் தொடர்பான பதிவுகளில் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

வாகனப் பதிவு மற்றும் ஓட்டுநர் உரிமம் தொடர்பான சேவைகள் தற்போது இணையவழி முறையில் வழங்கப்பட்டு வருகின்றன. வாகன வரி செலுத்துதல், முகவரி மாற்றம், உரிமம் புதுப்பித்தல், மின்னணு அபராத அறிவிப்புகள் மற்றும் பல்வேறு சேவைகள் தொடர்பான தகவல்கள் குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படுகின்றன.

பல வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்போரின் பதிவுகளில் பழைய அல்லது பயன்பாட்டில் இல்லாத செல்போன் எண்கள் இடம் பெற்றுள்ளதால், முக்கிய அறிவிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்களை பெறுவதில் சிரமம் ஏற்படுகிறது.

எனவே, அனைவரும் தங்களது பதிவுகளில் உள்ள செல்போன் எண்கள் சரியாக உள்ளதா என்பதை சரிபார்த்து, தேவையானால் உடனடியாக புதுப்பிக்க வேண்டும்.

மேலும், வாகன உரிமையாளர்கள் தங்களது வாகனப் பதிவுடன் இணைக்கப்பட்டுள்ள செல்போன் எண்ணை https://vahan.parivahan.gov.in/mobileupdate என்ற இணையதளத்தின் மூலமும், ஓட்டுநர் உரிமம் வைத்திருப்போர் தங்களது ஓட்டுநர் உரிமப் பதிவில் உள்ள செல்போன் எண்ணை https://sarathi.parivahan.gov.in/sarathiservice/mobNumUpdpub.do என்ற இணையதளத்தின் மூலமும் புதுப்பித்து கொள்ளலாம்.

கும்பகோணத்தில் ரவுடி மர்ம மரணத்தில் நண்பர் கைது

கும்பகோணம்

கும்பகோணத்தில் சரித்திரப் பதிவேடு குற்றவாளி மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்த வழக்கில் அவரது நண்பரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கும்பகோணம் மேலக் காவேரியைச் சேர்ந்தவர் மண்டை செல்வம் என்கிற செல்வம்(53). சரித்திரப் பதிவேடு குற்றவாளி பட்டியலில் இருந்த இவர், ஜூன் 7-ம் தேதி பாலக்கரை காவிரி ஆற்றில் படித்துறையில் தலையில் அடிபட்ட நிலையில் உயிரிழந்து கிடந்தார். போலீஸார் சென்று அப்பகுதி சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்ததில், சாக்கோட்டையைச் சேர்ந்த தமிழரசனுடன்(43) செல்வம் சென்றது தெரியவந்தது.

இதுகுறித்து போலீஸார் கூறியது: செல்வம், தமிழரசன் ஆகிய 2 பேர் மீதும் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. சிறையில் இருந்தபோது நண்பர்களான இவர்கள், வெளியே வந்தாலும் சந்தித்துக் கொள்வது வழக்கம். அவ்வாறு ஜூன் 7-ம் தேதி சந்தித்து பாலக்கரை காவிரி ஆற்றில் மதுபானம் அருந்திவிட்டு படித்துறையில் இறங்கியபோது கால் இடறி செல்வம் விழுந்துள்ளார். ஆனால், அதைப் பொருட்படுத்தாமல் தமிழரசன் அங்கிருந்து சென்றுவிட்டார். எனவே, தமிழரசன் கைது செய்யப்பட்டார் என்றனர்.

ஆவின்

VLR-309, வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

எண்.142 ஆற்காடு சாலை, சத்துவாச்சாரி, வேலூர் - 632 009.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பொது மேலாளர் வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், வேலூர்-9 அவர்களால் 2026-2028 ஆம் ஆண்டிற்கு (ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு) 14 தொகுப்பு பால் குளிர்விப்பு மைய வழித்தட வாகனங்கள் (BMC), 02 பால் உற்பத்தி பணிக்கான வாடகை கார் (TAXI) இலகு ரக வாகனம் ஒப்பந்த அடிப்படையில் வாகனங்கள் இயக்குவதற்கு **30.06.2026 மாலை 5.00 மணி வரை** இரட்டை கவர் முறையில் (Two Cover System) தொழில்நுட்ப தகவல் விண்ணப்பம் மற்றும் வணிக படிவ விண்ணப்பம் ஆகியவைகளை e-Tender (Online) இணையதள வழி மூலம் வரவேற்கப்படுகின்றன.

பொது மேலாளர்,

செ.ம.தொ.இ/2019/ஒப்பந்தப்புள்ளி/2026 **வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்ஒன்றியம் லிட், வேலூர்-9**

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

PUBLIC NOTICE

I, MOHAMED RIYASH, S/o.Amanullah, residing at No.53, Golden House, Big Mosque Street, Koranadu, Mayiladuthurai - 609001, do hereby inform that my minor daughter RIFANA FARVEEN (as per passport) is also known as RIFANA FARVEEN M (as per Aadhaar No : 7389 8944 5071 and School Records). Both names belong to one and the same person.

PUBLIC NOTICE

I, RISHMA (Aadhaar No.7139 5290 8958), D/o Mohamed Riyash, residing at No.53, Big Pallivasal Street, Koranadu, Mayiladuthurai - 609001, inform that my name is recorded as RISHMA M in school records and RISHMA MOHAMED RIYASH in Aadhaar card. Both names belong to one and the same person (myself). Henceforth, I shall be known as RISHMA M for all passport and official purposes.

பொது

விற்பனை

EASYTECH
CCTV CAMERA

ஈஸிடெக் செக்யூரிட்டி சிஸ்டம்ஸ்

AN ISO 9001-2008 COMPANY

இலவச டெமோவிற்கு அழைக்கவும்

74488 88906
95009 30200
www.easytechcctv.com

பொது

சுற்றுலா

IRCTC

Indian Railway Catering and Tourism Corporation Ltd.,
(Ministry of Railways)

IRCTC SOUTH ZONE, CHENNAI Educational Tours & Corporate Group Tours (20.08.2026– 20.09.2026). Exclusive Train/Coach, Accommodation, Meals, Road Transport & Sightseeing. Minimum group size 70 pax. Ideal for Schools, Colleges, Corporate, Employee Outings & Customer Loyalty Programs. Customized all-inclusive packages available. Contact

IRCTC South Zone, Chennai phone: 8287931965/9363488227
email : vijay5621@irctc.com & pjacob6750@irctc.com

திருவாய்மூரில் தேய்பிறை அஷ்டமி வழிபாடு

நாகப்பட்டினம்

திருக்குவளை அருகேயுள்ள திருவாய்மூர் தியாகராஜ சுவாமி கோயிலில் வைகாசி மாத தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு அஷ்ட பைரவருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றன.

முன்னதாக சிவாச்சாரியார் பிச்சைமணி தலைமையில் சிறப்பு யாகம் நடைபெற்றது. பின்னர், கடம் கோயிலை சுற்றி எடுத்து வரப்பட்டு கடத்தில் பூஜிக்கப்பட்ட புனிதநீர் கொண்டு அஷ்ட பைரவர்ளுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படும்முன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

கெனரா बैंक Canara Bank
भारत सरकार का उपक्रम A Government of India Undertaking
सिंडिकेट Syndicate

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை-மதுரை,
செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம்,
முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை-625001.

சுவாதீன அறிவிப்பு - பிரிவு 13(4) விதி 8(1) (அசையா சொத்துக்களுக்கானது)

கனரா வங்கி, அல்லிநகரம் கிளையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் 2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் & நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் (Act 54 of 2002) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்கூறிய சட்டத்தின் 13(12)-வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விதி 3-க்கு ஏற்பவும், கடன்தாரர் / ஜாமீன்தாரர் **M/s.சக்தி ஏஜென்சி** (திரு.மாணிக்க சோழன் & திருமதி.வசந்தா தேவி கணேசன் ஆகியோர் பார்ட்னர்களாக உள்ள ஒரு கூட்டாண்மை நிறுவனம்) & **திருமதி.G.முத்தமிழ்செல்வி** (ஜாமீன்தாரர்) ஆகிய முகவரிதாரருக்கு 18.03.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின் படி செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை ரூ.42,94,195.93 (ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து நூற்று தொன்னூற்று ஐந்து & பைசா தொன்னூற்று மூன்று மட்டும்) + வட்டி, கட்டணங்கள் ஆகியவற்றை **60** நாட்களுக்குள் செலுத்தக் கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டது. கடன்தாரர் மேற்கூறிய கடன் தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால், கடன்தாரர் & பொது மக்களுக்கு இவ்வறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில், கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், விதிமுறைகளின் விதி 8&9-க்கு இணங்கவும், **05.06.2026** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இந்த அறிவிப்பின் மூலம் குறிப்பாக கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் மற்றும் பொது மக்களுக்கு எச்சரிப்பது என்னவென்றால், அடையாள உடமை எடுத்துக் கொண்ட இந்த சொத்து, **கனரா வங்கிக்கு** செலுத்த வேண்டிய தொகையான 13.05.2026 அன்று ரூ.**44,07,491.53** (ரூபாய் நாற்பத்து நான்கு இலட்சத்து ஏழாயிரத்து நாநூற்று தொன்னூற்று ஒன்று & பைசா ஐம்பத்து மூன்று மட்டும்) + 14.05.2026 முதல் வட்டி, இதர கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது என்பதால் யாரும் கீழே குறிப்பிட்டுள்ள சொத்து மீது எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சர்ஃபாசி சட்டம் 2002, பிரிவு 13(8)-ன் கீழ் கூறியுள்ள பிணைய சொத்துக்கள் மீட்பதற்கான கால அவகாசம் பொருந்தும் என்பதை சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ஜாமீன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அசையா சொத்து விவரம் : உரிமையாளர்கள் – **திரு.மாணிக்க சோழன் கணேசன் & திருமதி.வசந்தா தேவி கணேசன்.**

ஐட்டம் எண்.1 : தஞ்சாவூர் மாவட்டம் & கருத்தட்டன்குடி சார் பதிவு மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் நகர மாநகராட்சி வரம்பு, வேலூர் வருவாய் வட்டம், வார்டு எண்.1, T.S.எண்.1584/2A-1584/2A1-இல் உள்ள கிழக்கு வடக்காக 30 அடி, தெற்கே 35 அடி, தென்வடல் மேற்கே 72 அடி, கிழக்கே 66.5 அடி. மொத்தம் 2250 சதுரடி, 209.11 சதுர மீட்டர், இந்த சொத்தின் புதிய T.S.எண்.1584/7. **நான்கு மால் :** T.S.எண்.1584/2B-இல் உள்ள வழிப்பாதையின் வடக்கே, நவநீதகிருஷ்ணன் மனைக்கு தெற்கே, அழகிரிசாமி காலி வீட்டு மனைக்கு கிழக்கே, முத்துக்குமரன் மனைக்கு மேற்கே. தற்போது தஞ்சாவூர் நகர மாநகராட்சி வரம்பில் உள்ள சொத்து. **ஐட்டம் எண்.2 :** தஞ்சாவூர் மாவட்டம் & கருத்தட்டன்குடி சார் பதிவு மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் நகர மாநகராட்சி வரம்பு, வேலூர் வருவாய் வட்டம், ராஜராஜ சோழன் நகர், வார்டு எண்.J, T.S.எண்.1585-இல் உள்ள 7500 சதுரடி. இந்த சொத்தின் புதிய T.S.எண்.1585/3. **நான்கு மால் :** அருணா தேவியின் மனைக்கு வடக்கே (ஐட்டம் எண்.1), மாநகராட்சி மனைக்கு தெற்கே, முத்துக்குமார் வீட்டு மனைக்கு கிழக்கே, மாநகராட்சி மனைக்கு மேற்கே. தற்போது தஞ்சாவூர் நகர மாநகராட்சி வரம்பில் உள்ள சொத்து.

நாள் : 05.06.2026 **அங்கீகாரம் பெற்ற அதிகாரி**
இடம் : மதுரை **கனரா வங்கி**

நாகூர் கடற்கரையில் ஜெல்லி மீன்களால் நேரிடும் அபாயத்தை தடுக்க ஆலோசனை

நாகப்பட்டினம்

நாகூர் கடற்கரையில் ஜெல்லி மீன்களால் நிலவும் அபாயம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பான ஆய்வுக் கூட்டம், நாகை ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தமிழக கடலோரங்களில் வெயில் காலங்களான மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் ஜெல்லி மீன்கள் அதிகளவில் காணப்படும். அனைத்து வகை ஜெல்லி மீன்களும் கொட்டும் தன்மை கொண்டவை. இந்நிலையில், நாகூர் கடலில் தற்போது ஜெல்லி மீன்கள் அதிகளவில் காணப்படுகின்றன. நாகூர் கடலில் இறங்கும் சுற்றுலா பயணிகள், ஜெல்லி மீன்களால் பாதிப்பு ஏற்படுவதாக புகார் கூறினர்.

இதைத்தொடர்ந்து, ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார் பேசுகையில், நாகூர் கடலுக்கு வரும் மக்களுக்கு ஜெல்லி மீன்கள் அபாயம் குறித்து பல்வேறு மொழிகளில் ஒலிபெருக்கியில் எச்சரிக்கை அறிவிப்பதுடன், கடற்கரையில் விழிப்புணர்வு பதாகைகள் வைக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை மூலம் தன்னார்வலர்களுக்கு ஜெல்லி மீன்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கான சிகிச்சை முறைகள் குறித்து பயிற்சி அளிக்க அறிவுறுத்தப்பட்டது.

உணவு கலப்படத்தை கண்டறிய மகளிர் குழுவினருக்கு விழிப்புணர்வு

காரைக்கால்

காரைக்காலில் மத்திய அரசின் இந்தியத் தர நிர்ணய அமைப்பின்(பிஐஎஸ்) சென்னை கிளை அலுவலகம் சார்பில் ஷைன் திட்டத்தின் கீழ், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் குழந்தைக்கான ஊட்டச்சத்து, உணவுக் கலப்படத்தை அடையாளம் காணுதல், பாதுகாப்பான சமையல் பாத்திரங்களை பயன்படுத்துதல், மருத்துவ சானிட்டரி நாப்கின்களின் அவசியம், மின் சாதனங்களை பாதுகாப்பாக பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய தலைப்புகளில் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

வாங்கும் பொருட்களின் தரம் மற்றும் நம்பகத் தன்மையை நுகர்வோர் உறுதிப்படுத்தும் வகையில் பிஐஎஸ் செயலி, ஐஎஸ்ஐ தரச்சான்று முத்திரை மற்றும் ஹால்மார்க் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

நுகர்வோர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் வழக்கறிஞர் எஸ்.திருமுருகன், அன்னை தெரசா அரசு செவிலியர் கல்லூரி முதல்வர் ஜெ.ஜெயபாரதி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு பேசினர்.

பொது அறிவிப்பு
தனலட்சுமி பேப்பர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்

பொதுமக்கள் அனைவரின் கவனத்திற்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவெனில், **M/s. தனலட்சுமி பேப்பர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்** (இனி "நிறுவனக் கடனாளர்" என குறிப்பிடப்படும்) நிறுவனத்திற்கு எதிராக, திவால் மற்றும் திவாலாக்கச் சட்டம், 2016 விதிகளின் கீழ், மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு (NCLT), CP/IBC/200/CHE/2023 வழக்கில் 29.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவின் மூலம் நிறுவன திவால் தீர்வு செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது. மேலும், சட்டத்தின் பிரிவு 14-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கும் (தடை காலம்) அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய உத்தரவின் அடிப்படையில், கையொப்பமிட்டுள்ள நான் இடைக்கால தீர்வு நிபுணராக நியமிக்கப்பட்டு, CIRP நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பை ஏற்றுள்ளேன். I&B Code-இன் பிரிவு 17-ன் படி, நிறுவனக் கடனாளரின் இயக்குநர் குழுவின் அனைத்து அதிகாரங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. தற்காலிக தடை காலத்தில் அவ்வதிகாரங்கள் அனைத்தும் இடைக்கால தீர்வு நிபுணரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், I&B Code-இன் பிரிவு 18(f)-ன் படி, நிறுவனக் கடனாளரின் இருப்புநிலை அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அல்லது மூன்றாம் நபர்களின் கட்டுப்பாட்டில் உள்ளதோ ஆகிய, நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்கள் மற்றும் உரிமைகள் மீது இடைக்கால தீர்வு நிபுணர் கட்டுப்பாடும் பாதுகாப்பும் மேற்கொள்வார். எனவே, யாரேனும் நபர் அல்லது நிறுவனம், நிறுவனக் கடனாளருடன் அல்லது அதன் இடைநிறுத்தப்பட்ட இயக்குநர் குழுவினருடன் அல்லது அதன் அலுவலர்கள், ஊழியர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுடன், நிறுவனத்திற்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், முதலீடுகள், அசையும் அல்லது அசையா சொத்துக்கள் (Intangible Assets) தொடர்பாக ஏதேனும் பரிவர்த்தனை, ஒப்பந்தம் அல்லது நடவடிக்கை மேற்கொண்டால், அது அவர்களின் சொந்த ஆபத்து மற்றும் பொறுப்பில் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும். அத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் I&B Code விதிகளுக்கு முரணானதாகவும், செல்லுபடியாகாததாகவும், நிறுவனத்தின் மீது கட்டுப்படுத்தும் விளைவு அற்றதாகவும் இருக்கும்.

நிறுவனக் கடனாளருக்குச் சொந்தமான எந்தவொரு சொத்தையும் சட்டவிரோதமாக தன் வசம் வைத்திருப்பவர் அல்லது இடைக்கால தீர்வு நிபுணருக்கு ஒத்துழைப்பு வழங்கத் தவறுபவர், I&B Code மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்ட விதிகளின் கீழ் வழக்குப்பதிவு, குற்றவியல் நடவடிக்கை மற்றும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

கிருஷ்ணசாமி வாசுதேவன்
இடைக்கால தீர்மான தொழில் முறையாளரின் பெயர்
IBBI Regn No. IBBI/IPA-001/IP-P00155/2017-18/10324
17B/7B, மாருதி நகர், அஸ்தினாபுரம்,
குரோம்பேட்டை, சென்னை - 600064

இடம்: சென்னை
நாள் : 09.06.2026

ESAF
ESAF SMALL FINANCE BANK

REGD. OFFICE: ESAF Bhavan, Mannuthy, Thrissur - 680 651, Kerala

தங்கநகை ஏல அறிவிப்பு

	23-06-2026
	2 PM TO 5 PM
	https://egold.auctiontiger.net
	Contact No: 9099013705/6351896640

BRANCH NAME & LOAN ACCOUNT NUMBERS

Anamalai: 75250003307053, 3407305, 3456811, 3523355, **Kariyampalayam**: 75250003528326, **Kuniyamuthur**: 63250002138695, **Pollachi**: 75250003732652, **Thondamuthur**: 75250004278978, **Cuddalore**: 75250003498251, **Dindigul**: 75250001031685, **Kanchipuram**: 75250001174875, **Thirpparappu**: 75250003822153, **Gudalur**: 75250003945531, 4436272, **Manjoor-Selas**: 75250004444048, **Alangulam**: 75250004285225, 4400780, **Mettanuthu**: 63250000630483, **Arani**: 75250000775702, **Viluppuram**: 75250003842035, **Puducherry**: 75250003471972.

தேதி 10/06/2026

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.75 D, ப்ளாக் எண்.4, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சி, தமிழ்நாடு-620018

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1631220280000001 & 1631230310000002 / 1.M/s ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் டிரேடர்ஸ் 2.Mrs.விமலா 3.Mr.தாமோதரன்.C	**(I) 23.02.2026 & 20.02.2026** அன்றுள்ளபடி ₹ **63,40,680/-** (ரூபாய் அறுபத்து மூன்று லட்சத்து நாற்பதாயிரத்து அறுநூற்று எண்பது மட்டும்) **(ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 29.04.2026**	11.05.2026 அன்றுள்ளபடி ₹ **65,66,051/-** (ரூபாய் அறுபத்தைந்து லட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐம்பத்தொன்று மட்டும்)	₹ **70,55,000/-** (ரூபாய் எழுபது லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்)	₹ **7,05,500/-** (ரூபாய் ஏழு லட்சத்து ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்)

சொத்து விவரம்: ஐட்டம் எண்.1: கும்பகோணம் பதிவு மாவட்டம், பாபநாசம் சார் பதிவு மாவட்டம் மற்றும் திருக்கருகாவூர் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.460, புதிய சர்வே எண்.460/1A1C, **மனை எண்.27, ஸ்ரீவாரி நகர், திருக்கருகாவூர் கிராமம், பாபநாசம் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இருபக்கமும் 60 அடி, தெற்கு வடக்காக இருபக்கமும் 30 அடி ஆகமொத்தம் **1800 சதுர அடி நிலம், அதிலுள்ள கட்டிடம்**, அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். புதிய சர்வே எண்.460/1A1C1. எல்லைகள்: வடக்கு: கிழக்கு மேற்காக 20 அடி அகல வழிப்பாதை, தெற்கு: மனை எண்.28, கிழக்கு: மெயின் ரோடு, மேற்கு: மனை எண்.26. **ஐட்டம் எண்.2:** கும்பகோணம் பதிவு மாவட்டம், பாபநாசம் சார் பதிவு மாவட்டம் மற்றும் திருக்கருகாவூர் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.460, புதிய சர்வே எண்.460/1A1C, **மனை எண்.28, ஸ்ரீவாரி நகர், திருக்கருகாவூர் கிராமம், பாபநாசம் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இருபக்கமும் 60 அடி, தெற்கு வடக்காக இருபக்கமும் 30 அடி ஆகமொத்தம் **1800 சதுர அடி நிலம், அதிலுள்ள கட்டிடம்**, அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். புதிய சர்வே எண்.460/1A1C2. எல்லைகள்: வடக்கு: மனை எண்.27, தெற்கு: மனை எண்.29, கிழக்கு: பாபநாசமிலிருந்து சாலியமங்கலம் செல்லும் ரோடு, மேற்கு: மனை எண்.26.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 17.07.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
16.07.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	**15.07.2026** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டீஜோ சாஜன் - 78451 92961**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:-support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.

i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-

தேதி: 10.06.2026, இடம்: பெங்களூரு **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by Venkatesan K at THG PUBLISHING PVT.LTD. Ward No. 27, RS No. 43-1B, Ariyamangalam Zone, Varaganery Village, Chennai Bye Pass Road, Senthaneerpuram, Tiruchirapalli-620004. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).